**அ.வ.எண்: 11/2019** **நாள்: 11.08.2025**

வா.சா.1 - துரைராஜ்

சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

**1, 2, 7 முதல் 10 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:**

1. எனக்கு வயது 63 ஆகும். 1ம் பிரதிவாதி எனது தாயார் என்றால் சரிதான். 2ம் பிரதிவாதி எனக்கு சகோதரர் என்றால் சரிதான். 3, 4, 5 பிரதிவாதிகள் எனக்கு சகோதரரிகள் என்றால் சரிதான். தாவா வழக்கை தாவா சொத்தில் பாகம் கேட்டு பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ளேன். தாவா சொத்தை தவிர வேறு சொத்துக்கள் உள்ளதால் என்றால் உள்ளது, அவற்றை பாகம் பிரித்துவிட்டோம். தாவா சொத்தை தவிர 3 முதல் 4 ஏக்கரை பிரித்துக்கொண்டோம். மேற்படி சொத்துகளை 2021ல் பாகம் பிரித்துக் கொண்டோம் என்றால் சரிதான். மேற்படி பாகப்பிரிவினை எழுத்து மூலமாக பதிவு செய்யப்பட்டது. மேற்படி பதிவு செய்யப்பட்ட பாகப்பிரிவினை பத்திரத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

2. மேற்படி சொத்துக்கள் யார் பெயரில் இருந்தது என்றால் எனது தகப்பனார், தாயார், என் தாத்தா ஆகியோர்கள் பெயரில் இருந்தது. மேற்படி பாகப்பிரிவினை சம்மந்தமாக எங்கள் குடும்பத்தாரே பேசி பிரிவினை செய்துக் கொண்டோம். மேற்படி பாகப்பிரிவினை பத்திரத்தில் ஊர்காரர்கள் யாரேனும் கையெழுத்து செய்து உள்ளார்களா என்றால் வெள்ளைசாமி, சந்திரன் ஆகியோர்கள் கையெழுத்து செய்துள்ளார்கள். எனக்கு 1987ல் திருமணம் நடைபெற்றது என்றால் சரிதான். எனது தகப்பனார் எப்பொழுது இறந்தார் என்றால் சுமார் 15 வருடங்களுக்கு முன்பு தேதி, வருடம் ஞாபகமில்லை. எனது திருமணத்திற்கு பிறகு சுமார் 8, 9 வருடங்கள் கழித்து தான் இறந்தார். எனக்கு திருமணம் நடைபெற்ற மறுநாளே எனது மனைவியுடன் மனைவி ஊருக்கு சென்றுவிட்டேன் என்றால் சரியல்ல. எனது மனைவி ஊர் உஞ்சனை ஆகும்.

3. எனது திருமணத்திற்கு முன்பு நானும் என் தகப்பனாரும் சேர்ந்து செங்கல்சூளை வைத்திருந்தோம். மேற்படி செங்கல்சூளை SLT என்றால் பெயரில் செயல்பட்டது. அதற்கான உரிமம் எனது தகப்பனார் பெயரில் இருந்தது. தாவா பிராதில் மேற்படி செங்கல்சூளையின் உரிமம் என் பெயரில் உள்ளது என்று கூறியுள்ளேன் என்றால் அது குறித்து எனக்கு நினைவில் இல்லை. எனது தகப்பனார் இறப்பிற்கு பிறகு மேற்படி செங்கல்சூளையை யார் நிர்வகிக்கிறார் என்றால் எனது

தகப்பனார் இறப்பிற்கு பிறகு செங்கல்சூளை செயல்படவில்லை. தாவா சொத்து 18.12.1997ல் 1ம் பிரதிவாதி ஆகிய எனது தாயார் பெயரில் கிரையம் வாங்கப்பட்டது என்றால் சரிதான். தாவா சொத்தை கிரையம் வாங்கும் பொழுது நான் என் மாமியார் ஊரில் இருந்தேன் என்றும், எனது தாயாருடன் நான் வசிக்கவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. தாவா சொத்தை யாரிடமிருந்து கிரையம் பெற்றார் என்றால் வீரப்ப செட்டியார் மற்றும் சிதம்பரம் செட்டியார் ஆகியோரிடமிருந்து கிரையம் வாங்கினார்.

4. தாவா சொத்தை எவ்வளவுக்கு கிரையம் வாங்கினார்கள் என்றால் ரூ.42,000க்கு கிரையம் வாங்கினார். மேற்படி பத்திரத்தில் யார் சாட்சி கையெழுத்து செய்தார்கள் என்றால் நான் வெளியூரில் இருந்ததால் சுப்பையா மற்றும் அன்பு ஆகியோர்கள் சாட்சி கையெழுத்து செய்தார்கள். மேற்படி அன்பு என்பவர் எனது சகோதரர் என்றால் சரிதான். மேற்படி அன்பு என்பவர் தமிழில் மட்டும் தான் கையெழுத்து செய்வார், ஆங்கிலத்தில் செய்யமாட்டார் என்று எனது பிராதில் கூறியுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி சொத்தை எனது தாயார் 6, 7 பிரதிவாதிகளுக்கு 21.01.2019ல் கிரையம் கொடுக்கும் போது அன்பு சாட்சி கையெழுத்து செய்துள்ளார் என்றால் சரிதான். மேற்படி 2019 ஆவணத்தில் அன்பு என்பவர் மோசடி எண்ணத்துடன் ஆங்கிலத்தில் கையெழுத்து செய்துள்ளார் என்று எனது பிராதில் கூறியுள்ளேன் என்றால் சரிதான்.

5. 1997ல் எனது தாயார் கிரையம் வாங்கிய கிரைய பத்திரத்தை நான் பார்த்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன். மேற்படி பத்திரத்தை நான் எப்பொழுது பார்த்தேன் என்றால் கிரையம் வாங்கிய பிறகு சுமார் 10 முதல் 15 நாட்களில் பார்த்தேன். மேற்படி பத்திரத்தில் எனது சகோதரர் தமிழில் தான் கையெழுத்து செய்து இருந்தார்கள். என்னிடம் காட்டப்படும் ஆவணம் தான் எனது தாயார் கிரையம் வாங்கிய கிரையப் பத்திரம் என்றால் சரிதான். மேற்படி கிரைய ஆவணம் **பி.வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** மேற்படி ஆவணத்தில் எனது சகோதரர் ஆங்கிலத்தில் தான் கையெழுத்து செய்துள்ளார் என்றால் சரிதான். தாவா பிராதில் எனது தாயார் படிக்காத தற்குறி என்று கூறியுள்ளேன் என்றால் சரிதான். எனது தாயார் இன்று வரை தனியாக தான் வசித்து வருகிறார் என்றும், நான் அவரது ஜீவனத்திற்கோ, மருத்துவ உதவிக்கோ எதுவும் செய்யவில்லை என்றால் சரியல்ல.

6. எனது சகோதரரான 2ம் பிரதிவாதி எனது தாயாருடன் வசித்து வருகிறார் என்றால் சரிதான். 21.02.2007ல் தினந்தந்தி நாளிதழில் நான் ஒரு பொது விளம்பரம் கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். அது வா.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி விளம்பரத்தில் 5 சொத்துக்களுக்கு விளம்பரம் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி விளம்பரம் எதற்காக செய்யப்பட்டது என்றால் எனது சகோதரரான 2ம் பிரதிவாதி புத்தி சுவாதீனம் இல்லாதவர் என்பதாலும் மேற்படி சொத்துக்களை பொறுத்து அவர் எதுவும் செய்து விடுவார் என்பதால் முன்னெச்சரிக்கையாக நான் இந்த விளம்பரத்தை செய்தேன். மேற்படி 2ம் பிரதிவாதிக்கு திருமணம் ஆகியுள்ளது என்றால் சரிதான். அவர் தனது மனைவியுடன் தான் வசிக்கிறார் என்றால் சரிதான். மேற்படி விளம்பரத்திற்கு பிறகு சொத்துக்களை பாகப்பிரிவினை செய்வதற்கு எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை என்றால் சரிதான், மொத்த சொத்தும் எனது தகப்பனார் பெயரில் இருந்ததால் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

7. நான் எனது மாமியார் வீட்டில் வசித்து வந்ததால் தாவா சொத்து உள்ள ஊரில் நடக்கும் விஷயங்கள் குறித்து எனக்கு தெரியவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்து எனது தாயாருக்கு தனித்து பாத்தியப்பட்ட சொத்து என்றும், மேற்படி சொத்து வாரிசு அடிப்படையில் பாகம் கோர முடியாது என்றும் சொன்னால் சரியல்ல, நானும் எனது தகப்பனாரும் சம்பாதித்து, ராசியின் காரணமாக மேற்படி சொத்தை எனது தாயார் பெயரில் எழுதினோம். மேற்படி சொத்தை கிரையம் வாங்கிய பத்திரத்தில், எனது மற்றும் எனது தகப்பனாரின் சம்பாதியத்தில் தான் மேற்படி சொத்து வாங்கப்பட்டது என்று குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை. எனது தாயார் கிரையம் வாங்கிய சொத்தை அவரது விருப்பப்படி கிரையம் கொடுக்க உரிமை உள்ளது என்றும், அதன் அடிப்படையில் தான் 6, 7 பிரதிவாதிகளுக்கு தாவா சொத்தை கிரையம் கொடுத்துள்ளார் என்றும் சொன்னால் சரியல்ல.

8. தற்பொழுது வரை எனது தாயாரின் ஜீவனத்திற்கு யாரும் உதவி செய்யாததால் தாவா சொத்தை கிரையம் கொடுத்த பணத்தில் தான் அவர் ஜீவனம் செய்து வருகிறார் என்றால் சரியல்ல. நான் எனது தகப்பனார் இறந்தவுடன் சொத்துக்களை பிரிவினை செய்ய சொல்லி எனது தாயாருடன் பிரச்சனை செய்தேன் என்றும் அதற்கு அவர் மறுத்ததால் தான் தினந்தந்தி நாளிதழில் விளம்பரம் செய்தேன் என்றும் சொன்னால் சரியல்ல. நான் எனது சகோதரர் மற்றும் சகோதரரிகளுக்கோ திருமணம் மற்றும் கல்வி செலவுகள் எதுவும் செய்யவில்லை என்று சொன்னால்

சரியல்ல. நான் மொத்த சொத்துக்களுக்கும் பாகப்பிரிவினை கேட்டு வழக்கு தாக்கல் செய்யாமல் தாவா சொத்திற்கு மட்டும் பகுதி பாகப்பிரிவினை கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளது செல்லத்தக்கதல்ல என்றும் சொன்னால் சரியல்ல. நான் விளம்பரம் செய்த சிறிது நாளிலே எனக்கு சேர வேண்டிய சொத்தை எனது தாயார் பிரித்து கொடுத்துவிட்டார் என்று சொன்னால் சரியல்ல. எனக்கு கொடுக்கப்பட்ட சொத்துக்கள் அனைத்தையும் விற்றுவிட்டு எனது மாமியார் ஊரில் வசித்து வருகிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்து எனது தாயாருக்கு தனித்து பாத்தியப்பட்ட சொத்து என்பதாலும், அதனை அவரது ஜீவனத்திற்காக விற்றுவிட்டார் என்பதாலும் கிரையம் வாங்கியவரிடம் பணம் பறிக்கும் நோக்கத்தில் தாவா வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

**<u>1, 2, 7 முதல் 10 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி:</u>**

வழக்கறிஞரின் வேண்டுக்கோளுக்கிணங்க ஒத்தி வைக்கப்படுகிறது.